# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2018.05.08

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 18 / 2017 (i)**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**ஒழுக்காற்று அலுவலர் (Marshal) தரம் II மற்றும் தரம் I பதவிகளை வகிப்பவர்கள் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் ஒழுக்காற்று அலுவலர் (Marshal) பதவியின் நேரொத்த தரங்களுக்கு உள்ளீர்ப்புச் செய்தல்**

2017.09.15 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் 2017.09.12 ஆம் திகதிய 18/2017 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுக்காற்று அலுவலர் (Marshal) தரம் II மற்றும் தரம் I பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளுடன் மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு பதவிகளின் சம்பளக் குறியீடு U-MN 2 இலிருந்து U-MN 3 வரை மாற்றமடைதல் சம்பந்தமாக தங்களது கவனம் ஈர்க்கச்செய்யப்படுகின்றது.

02. 18/2017 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை ஊடாக புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் வெளியிடப்பட்ட காலப் பகுதியில் பல்கலைக்கழக முறைமையில் பணியாற்றிய ஒழுக்காற்று அலுவலர் (Marshal) தரம் II மற்றும் தரம் I பதவிகளை வகிப்பவர்களை புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் கீழ் அந்தப் பதவிகளுக்கே உள்ளீர்ப்புச் செய்வதற்கு 2018.02.01 ஆம் திகதி நடைபெற்ற ஆணைக்குழுவின் 980 ஆவது கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

03. 18/2017 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை செயல்வலுப்பெற்ற திகதியான 2017.09.15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கவனத்திற்கொள்ளப்படும் ஊழியருக்கு ஏற்புடைத்தாகும் வகையில் அந்தத் தரத்தின் கீழ் புதிய சம்பள அளவுத் திட்டத்தின் ஏற்புடைய சம்பளப் படிநிலைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும். உதாரணமாக, ஊழியர் U-MN 2 (II) சம்பளக் குறியீட்டிற்குரிய சம்பள அளவுத் திட்டத்தின் 03 ஆவது படிநிலையின் மாதாந்த சம்பளத்தைப் பெறுபவராயின் ஒழுக்காற்று அலுவலர் (Marshal) பதவியில் அவர் வகித்த அந்தத் தரத்திற்கே U-MN 3 (II) சம்பளக் குறியீட்டிற்குரிய சம்பள அளவுத் திட்டத்தின் 03 ஆவது படிநிலைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவார்.

| **கவனத்திற்கொள்ளப்படும் ஒழுக்காற்று அலுவலர் (Marshal) தரம் II மற்றும் தரம் I பதவிகளை வகிப்பவர்களின் முன்னைய சம்பள அளவுத் திட்டங்கள்** | **கவனத்திற்கொள்ளப்படும் ஒழுக்காற்று அலுவலர் (Marshal) தரம் II மற்றும் தரம் I பதவிகளை வகிப்பவர்களை உள்ளீர்ப்புச் செய்வதற்கான புதிய சம்பள அளவுத் திட்டங்கள்** |
|---|---|
| **ஒழுக்காற்று அலுவலர் (Marshal) தரம் II**<br>U-MN 2 (II) - ரூ. 37275-18 × 470 - மாதாந்தம் ரூ. 45735 (2020.01.01 ஆம் திகதி முதல்) | **ஒழுக்காற்று அலுவலர் (Marshal) தரம் II**<br>U-MN 3 (II) - ரூ. 42590-18 × 615- மாதாந்தம் ரூ. 53660 (2020.01.01 திகதி முதல்) |
| **ஒழுக்காற்று அலுவலர் (Marshal) தரம் I**<br>U-MN 2 (I) - ரூ. 42590-17 × 615; 8× 690 - மாதாந்தம் 58565 (2020.01.01 ஆம் திகதி முதல்) | **ஒழுக்காற்று அலுவலர் (Marshal) தரம் I**<br>U-MN 3 (I) - ரூ. 49635-9 × 895; 4× 1125 - மாதாந்தம் ரூ. 62190 (2020.01.01 ஆம் திகதி முதல்) |

04. புதிய சம்பள அளவுத் திட்டத்தின் கீழ் ஊழியர்கள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அவர்களுக்கு நிதி சார்ந்த நட்டம் ஏற்படாதிருப்பதற்காக ஒழுக்காற்று அலுவலர் (Marshal) பதவி வகிப்பவர்களுக்கான நிலுவைச் சம்பளத்தை 2017.09.15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் பிரகாரம் செலுத்துதல் வேண்டும்.

05. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம் / பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/79 (தொகுதி - II)